மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: ல்: 111 | வள்ளுவர் ஆண்டு 2054 | செவ்வாய்க்கிழமை 19.12.2023 | பக்கங்கள் 08



# நாட்டின் ஆட்சி, அதிகாரத்தை கைப்பற்ற பாடுபடும் ராஜபக்சக்கள்!

## கோ.கருணாகரம் எம்.பி தெரிவிப்பு!

பக்கம் 02

# வெளியுறவுக் கொள்கையில் விரைவில் மாற்றம்:

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க!



பக்கம் 02

## நிர்வாணமாக கொண்டு செல்லப்பட்ட பாலஸ்தீனியர்கள்!



பக்கம் 02

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குங்கள்.

சபா குகதாஸ்



பக்கம் 03

## துபாய் காலநிலை மாற்ற (COP 28) மாநாடு: போர் பகைமையில் உலகின் துயர் துடைக்கப்படுமா ?



பக்கம் 06

## மட்டக்களப்பு, புதிய அரச அதிபராகப் பதவியேற்றார்

'ஜஸ்ரினா யுலேக்கா'



பக்கம் 02

## முல்லைத்தீவில் இன்று எட்டு பாடசாலைகளின் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறாது.



பக்கம் 04



# நிர்வாணமாக கொண்டு செல்லப்பட்ட பாலஸ்தீனியர்கள்!



இஸ்ரேலிய படையினரால் கண்கள், கைகள் கட்டப்பட்டு நிர்வாணமாக கொண்டு செல்லப்பட்ட பல பாலஸ்தீனிய கைதிகள் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ள தாக இஸ்ரேலிய ஊடகமான Haaretz திங்களன்று தெரிவித்துள்ளது. குறித்த செய்தித்தாளின் தகவலின்படி, கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட கைதிகள் தெற்கு இஸ்ரேலில் பிர் அல் சபா (பீர்ஷெபா) அருகே உள்ள Sde Teiman இராணுவ தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
கண்கள் கட்டப்பட்டு கைவிலங்குகளுடனேயே இவர்கள் பெரும்பாலான நாட்களில் கண்கள் கட்டப்பட்டு கைவிலங்குகளுடனேயே தங்க வைக்கப்பட்டனர்.

# மட்டக்களப்பின் அரசாங்க அதிபராகப் பதவியேற்றார் ‘ஜஸ்ரினா யுலேக்கா’



மட்டக்களப்பு மாவட்டத்திற்கான புதிய அரசாங்க அதிபராக ‘திருமதி. ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன்’ நேற்று (18) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.
32 வருடகாலமாக இலங்கை நிருவாக சேவையில் பல்வேறு பதவிகளில் இருந்த இவர், கடந்த 2022.01.07 ஆம் திகதி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த நிலையில், கடந்த 13ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
இந்நிலையில் இன்றைய தினம் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வில் புதிய மாவட்ட அரசாங்க அதிபரின் குடும்பத்தினர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் உள்ளிட்ட மாவட்ட செயலக உயரதிகாரிகள் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# நாட்டின் ஆட்சியை கைப்பற்ற பாடுபடும் ராஜபக்சர்கள்! கோவிந்தன் கருணாகரம் எம்.பி சாடல்!



நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைக்கு காரணமாக உள்ளவர்கள் அடுத்த ஆட்சியை கைப்பற்றுவதற்குரிய திட்டங்களை தொடங்கியுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.
மலையக மக்கள் அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் மக்களாக இருந்தாலும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக இருந்த குற்றவாளிகள் இன்றும் சுதந்திரமாக நடமாடி திரிகின்றனர்.
மலையக மக்களுடன் வடக்கு கிழக்கு மக்கள் என்றும் கைகோர்த்து இருப்போம்.
அண்மையில் இடம்பெற்ற மொட்டுவின் மாநாட்டில் முன்னாள் அதிபரைக் காணவில்லை. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைக்கு காரணமாக உள்ளவர்கள் அடுத்த ஆட்சியை கைப்பற்றுவதற்குரிய திட்டங்களை தற்போதே தீட்ட தொடங்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# வெளியுறவுக் கொள்கையில் விரைவில் மாற்றம்: ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க!

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் சாதகமான மாற்றத்திற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.
தியத்தலாவ இலங்கை இராணுவக் கல்வியற் கல்லூரியில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற வர்ணங்கள் வழங்கல் மற்றும் விடுகை அணிவகுப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,
“இதுவரையில் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து அமைதி காக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக செயற்பட்டு வருகின்றோம். அதனை நாட்டின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கையின் ஒட்டுமொத்த அங்கமாக நாம் கருதவில்லை. இது நமது வெளியுறவுக் கொள்கை மற்றும் நமது பாதுகாப்புக் கொள்கையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். நாட்டின் புதிய வெளியுறவுக் கொள்கையில், அமைதி காத்தல், காலநிலை மாற்றம், சர்வதேச உறவுகளில் எமக்கு முக்கியமான பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்படும். இது தொடர்பாக நாம் மாலைதீவுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு வழங்கக்கூடிய சேவைகள் குறித்து தெரியப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சேவைகள் கட்டளைத் தளபதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். போதைப்பொருள் கடத்தல்காரர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு அவசியம். அதற்கேற்ப, அரசியல் உருவாகும்போது, ஐ.நா. தூதுக்குழுக்களின் பணிகளின் தன்மையும் மாறுகிறது என்பதை புரிந்துகொள்ளலாம்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு சுகாதார வசதிகளை வழங்குங்கள்.

## தமிழீழ விடுதலை இயக்க யாழ் மாவட்ட அமைப்பாளர் சபா குகதாஸ்




இயற்கை அன்னையின் சீற்றத்தால் பாரிய வெள்ளப் பெருக்கு காரணமாக வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு , மன்னார் வவுனியா, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் பெருமளவு மக்கள் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ உதவிகள் முழுமையாக போதாமையால் தன்னார்வு அமைப்புக்கள் , அறக்கட்டளைகள் , கொடையாளர்கள் முகாம்களில் தங்கியுள்ள மக்களை சந்தித்து தேவைகளை பூர்த்தி செய்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலாக இருக்கும்.

குழந்தைகளுக்கு தேவையான உணவுகள் எல்லோருக்குமான சுகாதாரத்தை ஓரளவு உறுதி செய்வதுடன் நுளம்புத் தொல்லையில் இருந்து பாதுகாப்பதற்கான உதவிகள் தொற்றா நோயாளர்களுக்கான உதவிகள் மிக முக்கியமானவை. டெங்கு , வாந்திபேதி., வயிற்றோட்டம் போன்ற நோய்கள் விரைவாக பரவும் அபாயம் உள்ளதால் தூய குடிநீர் வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும் ஆகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் உதவி செய்ய உதவும் கரங்கள் கைகொடுங்கள் .

# மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு திடீர் விஜயம். கோவிந்தன் கருணாகரன் எம்.பி





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் நேற்றைய தினம் கடந்த மாவீரர் தின நிகழ்வு தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களை சந்திக்கும் முகமாக மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் உள்ளிட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடியதுடன், கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், எதிர்வரும் 21ம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது இந்த விடயங்களையும் முன்னிலைப்படுத்தி கலந்துரையாடுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதன்போது தமிழீழ விடுதலை இயக்கத்தின் உபதலைவரும், முன்னாள் கிழக்கு மாகணசபை தவிசாளருமான இந்திரகுமார் பிரசன்னா அவர்களும் கலந்துகொண்டிருந்தார்.





தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க
தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி : 021 221 7557 / +94 76 567 3339

# முல்லைத்தீவில் இன்று எட்டு பாடசாலைகளின் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறாது.




முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவி வருகின்ற மழையுடன் கூடிய கால நிலை காரணமாக இன்றைய தினம் (19.12.2023) எட்டு பாடசாலை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறாது என முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக 1586 குடும்பங்களை சேர்ந்த 4806 பேர் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையில் ஏழு இடைத்தங்கல் முகாம்களில் 341 குடும்பங்களைச் சேர்ந்த 1039 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

இவ்வாறான பின்னணியில் இடைத்தங்கல் முகாம்களாக பயன்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இதற்கமைவாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மு/மன்னாகண்டல் அ.த.க.பாடசாலை, மு/இருட்டுமடு தமிழ் வித்யாலயம்,மு/நெத்தலியாறு ஆரம்பப் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளும்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மு/கருவேலன்கண்டல் அ.த.க.பாடசாலை, மு/கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை,மு/முத்துஐயன்கட்டு வலதுகரை மகாவித்தியாலயம் மு/பேராறு தமிழ் வித்தியாலயம் மு/பண்டாரவன்னியன் மகாவித்தியாலயம் (கற்சிலைமடு ) ஆகிய ஐந்து பாடசாலைகளும் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறாது என முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது

அத்தோடு முல்லைத்தீவு பரந்தன் வீதியில் விசுவமடு மாணிக்க பிள்ளையார் கோவில் முன்பாக உள்ள வீதியை குறுக்கறுத்து வெள்ள நீர் பாய்ந்து கொண்டிருக்கின்றது. எனவே இதனால் பயணம் செய்யும் பயணிகள் மிகவும் அவதானமாக பயணிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

# இலங்கையில் இணையம் ஊடாக நடக்கும் மோசடிகள்: மக்களுக்கு எச்சரிக்கை.



இணையத்தில் பணம் சம்பாதிப்பது தொடர்பான மோசடிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மெசஞ்சர் மற்றும் வாட்ஸ்அப் மூலம் பரிசு வழங்கல் மற்றும் சலுகைகள் தொடர்பான சந்தேகத்திற்கிடமான இணைப்புகளைத் திறப்பதைத் தவிர்க்குமாறு குற்றப் புலனாய்வுத் துறையின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு மக்களுக்கு அறிவுறுத்துகிறது.

நாளொன்றுக்கு ஐந்திற்கும் மேற்பட்ட முறைப் பாடுகள் கிடைக்கப்பெறுவதாக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

**இணைய மோசடிகள்**

ஒன்லைனில் பணம் சம்பாதிக்கும் வர்த்தகத்தின் மூலம் தனக்கு 80 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக குற்றப் புலனாய்வுத் துறையின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவில் மென்பொருள் பொறியாளர் ஒருவர் சமீபத்தில் முறைப்பாடு செய்துள்ளார்..கிடைக்கப்பெற்ற முறைப்பாடுளுக்கமைய, பெரும்பாலும் 20 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இந்த இணையவழி பண மோசடிகளில் சிக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.




**வங்கிக் கணக்கு**

வெளிநாடுகளில் உள்ள நபர்கள் மற்றும் இலங்கையில் உள்ளவர்களுடன் இணைந்து இந்த மோசடிகளை மேற்கொள்வதாக தற்போதைய விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர் மேலும், தங்களது வங்கிக் கணக்கு எண்கள் மற்றும் ரகசிய கடவுச்சொற்களை வேறு தரப்பினருக்கு வழங்க வேண்டாம் என கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# வடக்கு - கிழக்கு மழைவீழ்ச்சி தொடர்பில் புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வெளியிட்ட தகவல்.





வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கிடைத்து வருகின்ற கனமழைக்கான பிரதான காரணம், வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள காற்று சுழற்சியானது மேற்கு நோக்கி, இலங்கைக்கு கீழாக நகர்ந்து அரபிக்கடலை சென்றடைகின்றமையாகும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இந்த சுழற்சி காற்றானது நாளை அல்லது நாளை மறுதினம் இலங்கையிலிருந்து முழுமையாக விடுபட்டு அரபிக் கடலுக்கு சென்றடையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நாளை இரவு முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் படிப்படியாக மழை வீழ்ச்சி குறைவடைவதற்கான சந்தர்ப்பம் உள்ளதென எதிர்பார்க்கப்படுகிறது என சிரேஸ்ட விரிவுரையாளர் தெரிவித்துள்ளார்.

**வெள்ள அனர்த்தங்கள்**

அவர் மேலும் தெரிவிக்கையில், கிடைத்து வருகின்ற கனமழை காரணமாகவும் வடக்கு மாகாணத்தில் உள்ள நீர்ப்பரப்பு நீர் நிலைகள் அவற்றினுடைய உவர் நீரை பல்வேறுவதன் காரணமாகவும் பல்வேறு பகுதிகள் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளும், கிளிநொச்சியின் கிழக்குப் பகுதியும், வவுனியா மாவட்டத்தினுடைய வடக்கு பகுதியும் , மன்னர் மாவட்டத்தில் மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி போன்ற பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலும் கிடைக்கின்ற கனமழை மற்றும் மேலதிக மேற்பரப்பு நீர் காரணமாகவும் வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற 54 நடுத்தர மற்றும் மிகப்பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் அவற்றினுடைய உவர் நீரை வெளியேற்றுவதறுவதன் காரணமாகவும், தொடர்ச்சியாக 100 மில்லிமீட்டருக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சி பல பிரதேசங்களில் பதிவாகி இருப்பதன் காரணமாகவும் வடக்கு மாகாணத்தினுடைய பல பகுதிகளிலும் வெள்ள அனர்த்தத்திற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தினுடைய தாழ்நிலப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள், ஆற்றங்கரை ஓரம், குளங்கள் மற்றும் வான் பாய்கின்ற பகுதிகளுக்கு அண்மித்திருக்கின்ற மக்கள் முன்னேற்பாடாக முதலே பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக, ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைப்பதற்கான நிலைமைகள் காணப்படுகின்றன.

**மீண்டும் ஒரு காற்று சுழற்சி**

அதேசமயம் வடக்கு மாகாணத்திற்கு தற்போது கிடைத்து வருகின்ற மழையானது நாளை பிற்பகுதியுடன் படிப்படியாக குறைவடைந்து மீண்டும் 23 ஆம் திகதியளவில் மழை வீழ்ச்சி ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. வங்காள விரிகுடாவில், குறிப்பாக இலங்கைக்கு கிழக்காக எதிர்வரும் 19, 20, 22 ஆம் திகதிகளில் மீண்டும் ஒரு காற்று சுழற்சி உருவாகுவதன் காரணமாக இலங்கையினுடைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மீளவும் ஒரு கனமழையை எதிர்நோக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

அத்துடன் எதிர்வரும் 29 ஆம் திகதியும், 2024ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதியும் மீளவும் காட்டு சுழற்சிகள் தோன்றுவதற்கான வெப்பநிலை சாதகங்கள் வங்காள விரிகுடாவில் காணப்படுவதன் காரணமாக வடக்கு மாகாணம் அடுத்த ஆண்டு நடுப்பகுதி வரை தொடர்ச்சியாக கன மழையை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே வடக்கு மாகாணங்களில் உள்ள குளங்கள் அவற்றின் முழு கொள்ளளவை எட்டிய நிலையில் உவர்நீரை தற்சமயம் வெளியேற்றி வருகின்றது. இந்த நிகழ்வு அடுத்த கிழமை வரைக்கும் தொடரும் என்பதனால் 23 முதல் கிடைக்கின்ற கனமழையும், தொடர்ச்சியாக இந்த பிரதேசங்களில் வெள்ள அனர்த்ததை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கும்.

எனவே மக்கள் இந்த நிலைமைகளை உணர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்கூட்டிய மேற்கொள்வதன் ஊடாக தங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை இயலுமான அளவில் குறைக்க முடியும் என கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.




# துபாய் காலநிலை மாற்ற (COP 28) மாநாடு: போர் பகைமையில் உலகின் துயர் துடைக்கப்படுமா?




**( மாநாட்டில் மாசற்ற பூமியை உருவாக்குவதை நோக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும், அதனை நடைமுறைப் படுத்தும் சாத்தியங்கள் வெகு கடினமாகவே இருக்கும்)**

ஒரு சிறந்த மாசற்ற பூமியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு COP-28 மாநாடு ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள துபாயில் நவம்பர் 30-ஆம் தேதி முதல் டிசம்பர் 12-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

படிம எரிபொருள் (Fossil fuel) வளத்தை நம்பி இருக்கும் நாடான துபாயில் நடத்தப்படும் இந்த மாநாட்டிற்கு பல தரப்பினர் தங்கள் எதிர்ப்புகளையும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. துபாய் தனது எரிபொருள் உற்பத்தியை அதிகரிக்க முயற்சி மேற்கொள்வது இந்த எதிர்ப்பிற்கு காரணமாக கூறப்படுகிறது.

**வரலாற்றில் அதி வெப்பமான ஆண்டு:**

வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவிற்கு அதிக வெப்பமான ஆண்டாக இந்த ஆண்டு பதிவாகி இருப்பதாகவும், இது குறித்து உடனடி நடவடிக்கை தேவை என்பதை வலியுறுத்தி துபாயில் காலநிலை மாற்றத்திற்கான மாநாடு நடைபெறுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவிப்பு ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தது.

ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்பு பருவநிலை மாற்றத்திற்காக முதல் சர்வதேச மாநாடு பாரிசில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் உலகின் பெரும்பான்மையான நாடுகளின் தலைவர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள்.

அமெரிக்காவும் வளர்ந்த மேற்கத்தய நாடுகளும் அதிகமான கரியமில வாயுக்களை வெளியில் உமிழ்வதுடன், குறிப்பாக படிம எரிபொருட்கள் (Fossil Fuel) என்று அழைக்கப்படக்கூடிய பெட்ரோல், டீசல், நிலக்கரி, எரிவாயு ஆகியவற்றை வாகன மற்றும் வீட்டு உபயோகங்களுக்கு மிதமிஞ்சிப் பயன்படுத்துவதால்தான் நாளுக்குநாள் புவி வெப்பம் அதிகரித்து வருகிறது எனவும் கூறப்படுகிறது.

பூமியில் அதிகரித்துவரும் வெப்பநிலையால் ஏற்படும் பருவநிலை மாற்றங்களைப் பற்றி உணராமல் இருப்பது ஆபத்தானது. உலகத்தினுடைய வெப்பநிலை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் மாறாமலேயே இருந்திருக்கிறது.

பல நூறுகோடி ஆண்டுகள் தாக்குப்பிடித்த இவ்வுலகம், கடந்த 100 முதல் 200 ஆண்டுகளில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட மாற்றங்களால் பெரும் பாதிப்புக்கு ஆளாகிறது.

**துபாய் காலநிலை மாற்ற மாநாடு:**

காலநிலை மாற்றத்திற்கான நிதியுதவி மற்றும் பூமியிலிருந்து கிடைக்கும் எரிபொருள் பயன்பாட்டினை கட்டுப்படுத்துதல் போன்றவை முதன்மையான கருத்தாக முன்வைக்கப்பட்டு துபாயில் நடைபெறும் காலநிலை மாற்றம் மாநாட்டில் பேசப்பட உள்ளது.

துபாயில் நடைபெறும் 28வது உலக காலநிலை மாற்றத்துக்கான மாநாட்டில் உலகின் பல நாடுகளில் நடந்த இயற்கை பேரழிவு, காட்டு தீ, அதிகரித்த பூமியின் வெப்பம் போன்றவை குறித்தும் கலந்துரையாடல் நடைபெற உள்ளது.

கடந்த 100 ஆண்டுகளில் அதிகரித்த மக்கள்தொகை, மக்கள்தொகைக்கு ஏற்ப அதிகரிக்கும் உணவு உற்பத்திகள், மாமிசம், பால் வகைகள் மற்றும் ராக்கெட் வேகத்தில் அதிகரித்து வரும் வாகன உற்பத்திகள், அவற்றை இயக்க பயன்படும் எரிபொருட்களான பெட்ரோல், டீசல், நிலக்கரி ஆகியவற்றால் ஏற்படும் வெப்ப நிலை அதிகரிப்பு பருவநிலைகளை மாற்றியமைக்கிறது.

உலகத் தலைவர்கள், மாநில பிரதிநிதிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்கள் பங்கேற்கும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு (ஊழீ 28) நவம்பர் 30 ஆம் தேதி துபாயில் உள்ள எக்ஸ்போ சிட்டியில் தொடங்குகியது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் மூன்று நிகழ்ச்சிகளில் இந்தியப் மோடியும் கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸ் என 70 ஆயிரம் பேர் பங்கேற்றார்கள் எனக் கூறப்படுகிறது.

காலநிலை மாற்றம் மற்றும் நாடுகள் அதை எவ்வாறு சமாளிக்க திட்டமிட்டுள்ளன என்பது குறித்த உரையாடலுக்கான முன்னணி சர்வதேச தளமாக காலநிலை மாற்ற உச்சிமாநாடு செயல்படுகிறது.

மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு உடன்பாட்டில் (UNFCCC) இணைந்துள்ள உறுப்பு நாடுகளிடையே, காலநிலை மாற்றம் குறித்த கலந்துரையாடல்களை வழிநடத்துவதில் இந்த மாநாடு முக்கிய பங்கு வகிக்கிறது.

மாற்றத்திற்கான கூட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக அனைத்து பங்குதாரர்களுக்கும் புதிய,



# துபாய் காலநிலை மாற்ற (COP 28) மாநாடு:

சமமான தீர்வுகளுக்கு பங்களிப்பைப் பெறுவதும், சமமான வாய்ப்புகளை வழங்குவதும் இந்த மாநாட்டின் குறிக்கோளாகும்.

உலகளவில் நிலையான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியைப் பேணுவதற்கும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கும் அனைத்து உறுப்பு நாடுகளின் கூட்டு அர்ப்பணிப்பின் முக்கியத்துவத்தையும் இந்த மாநாட்டில் வலியுறுத்தப்படுகிறது.

**நிலக்கரி குறைப்பில் இந்தியாவின் நிலை:**

இந்த ஆண்டு நடைபெறும் cop 28 மாநாடு குறித்து இந்திய வெளியுறவு செயலாளர் வினய் மோகன் குவாத்ராச, எரிசக்தி தேவைக்காக நிலக்கரி பங்கை குறைப்பதில் இந்தியாவின் நிலைப்பாடு பற்றிய தன் கருத்தை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் எரிசக்தி தேவையில் எப்போதும் நிலக்கரி முக்கியத்துவமான தாகும். நாட்டின் வளர்ச்சிக்கு தேவையானவற்றிற்றை பூர்த்தி செய்ய இந்தியா முயற்சித்து வருகிறது. நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய காலநிலை மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் வளர்ச்சி பசுமையானதாக இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற COP26 இயற்றப்பட்ட ஐந்து 'பஞ்சமிர்த' கொள்கைக்கு பிரதமர் மோடி உறுதியளித்திருந்தார். மின்சார தேவையில் பாதியை புதுப்பிக்கத் தக்க சக்திகளில் இருந்து பெறுவது, 2030ஆம் ஆண்டுக்குள் 1 பில்லியன் தொன் கார்பன் உமிழ்வைக் குறைப்பது உள்ளிட்ட ஐந்து கொள்கைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்திருந்தார்.

**சர்வதேச ஒத்துழைப்பும் பங்கவிப்பும் :**

காலநிலை மாற்றத்தை கையாள்வதில் ஐக்கிய அரபு இராச்சியம் அதன் அர்ப்பணிப்பை வலியுறுத்தியுள்ளது.
அத்துடன் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்களை




சமாளிப்பதில் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் காலநிலை மாற்ற மாநாடு 1995ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வருடமும் நடக்கும் மாநாட்டில் உலகத் தலைவர்கள், அரசாங்க பிரதிநிதிகள் பங்கேற்று, பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அதைச் செயல்படுத்துவதற்குப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு நிதி உதவி வழங்குவது சம்பந்தமாகவும் விவாதிப்பார்கள்.

உலகில் பல்வேறு நாடுகளிலும் படிம எரிபொருட்களை ( Fossil fuel) எரிப்பதன் மூலம் தான் தங்களுக்கு தேவையான சக்தி பெறப்படுகிறது. இவ்வாறு படிம எரிபொருட்களை எரிப்பதன் மூலம் அதிகளவு கார்பன் உமிழ்வு நிகழ்கிறது.

காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் இந்த மாநாட்டில் படிம எரிபொருட்கள் பயன்பாட்டிற்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என கருதப்படுகிறது. முந்தைய மாநாடுகளிம் இதுபோன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இருந்தன.

இந்த மாநாட்டில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தேவையான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அதில், அதிகளவு கார்பன் உமிழ்வை வெளியிடும் வளர்ந்த நாடுகள், பொருளாதார நிலையில் பின்தங்கிய நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் தேவையான நிதியுதவியை வழங்கும் என கருதப்படுகிறது.

ஆயினும் பாலஸ்தீன - இஸ்ரேல் மோதலும், தொடரும் உக்ரேனிய யுத்தமும் உலகை இரு கூறுகளாக பிளவுபடுத்தி வைத்துள்ளது. தொடரும்
போர் பகைமையில் உலகின் துயர் துடைக்கப்பட்டு, ஒரு சிறந்த மாசற்ற பூமியை உருவாக்குவதை நோக்கிய முடிவுகள் இந்த மாநாட்டில் எடுக்கப்பட்டாலும், அதனை நடைமுறைப்படுத்தும் சாத்தியங்கள் வெகு கடினமாகவே இருக்கும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**






# யாழில் நடைபெறவிருந்த ஹரிஹரனின் இசை நிகழ்ச்சி ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கிலே இடம்பெறவிருந்த பிரபல தென்னிந்திய பாடகர் ஹரிஹரனின் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி இந்த இசை நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

NORTHERN UNI இன் ஏற்பாட்டில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு மேடை ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இசை நிகழ்ச்சி சீரற்ற காலநிலை காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஆவலுடன் எதிர்பார்த்து இருந்த உங்களை மனவருத்தத்தில் ஆட்படுத்துவதை எண்ணி SLIIT NorthernUni ஆகிய நாம் மிகவும் கவலை கொள்கிறோம்.

நட்சத்திர கொண்டாட்டம் யாழ்ப்பாணத்தின் சீரற்ற காலநிலை காரணமாகவும், தமிழ் நாட்டில் நிலவும் பதற்றகரமான காலநிலை காரணமாகவும், புயல் எச்சரிக்கையால் விமானபயணங்கள் தடைப்பட்டு இருப்பதாலும் மற்றும் முல்லைத்தீவு கிளிநொச்சி போன்ற பகுதிகளில் கடும் வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டு இருப்பதனாலும் அங்கிருந்து மக்கள் வரமுடியாத சூழல் உருவாகி உள்ளது.

இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு Hariharan Live in concert மற்றும் Star Night நிகழ்ச்சி பிற்போடப்படுகிறது என்பதனை மக்களாகிய உங்களுக்கு மனவருத்தத்துடன் அறிய தருகிறோம். எம் நிகழ்ச்சி வெறுமனே இசை நிகழ்ச்சியாக மட்டுமே இருந்திருந்தால் இந் நிகழ்ச்சியை நிகழ்த்தி இருக்க முடியும்.



ஆனால் இது நட்சத்திர கொண்டாட்டமும் என்பதினால் எதிர்பார்த்தளவில் எதிர்பாத்தது போன்று கண்ணுக்கு விருந்தளிக்க முடியாமல் போனதை இட்டு மனம் வருந்துகின்றோம்.

இயற்கையின் சீரற்ற தன்மையினால் இலவசமாக வழங்கும் Hariharan Live in concert மற்றும் Star Night நிகழ்ச் சியானது எதிர்வரும் பிப்ரவரி மாதம் 9ஆம் திகதி நடாத்தப்படும் என்பதனை மகிழ்வுடன் அறிய தருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசத்தில் முதலிடம் பெற்ற யாழ் மாணவனுக்கு பணப் பரிசு!







மலேசியாவில் நடைபெற்ற UCMAS சர்வதேச மனக் கணித போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவன் champion ஆக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அம் மாணவனை கௌரவிக்கும் முகமாக யாழ் நூலக கேட்போர் கூடத்தில் அவரை போட்டிக்கு தயார் செய்த யாழ் நகர UCMAS கிளையால் கௌரவிக்கும் நிகழ்வு UCMAS Jaffna Town Center இன் தலைவர் திருமதி தயானா சந்துரு தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கோசலை மதன் ( சிரேஷ்ட விரிவுரையாளர், சட்டத்துறை, யாழ் பல்கலைக்கழகம்) சிறப்பு விருந்திராக காயத்திரி கோகுலன் (சட்டத்தரணி) மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். பல தரப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான கேடயங்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. சர்வதேச தரத்தில் வெற்றி பெற்ற மாணவனாக கேடயத்தை பல்கலைக்கழக விரிவுரையாளர் கோசலை மதன் அவர்கள் வழங்க 50,000 பணப் பரிசினை சட்டத்தரணி காயத்திரி கோகுலன் மற்றும் தயானா சந்துரு அவர்களும் வழங்கி வைத்தனர்.